

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் ஸ்போர்ட்ஸ் அகாடமி சார்பில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு மாநில அளவிலான பெண்கள் மற்றும் ஆண்களுக்கான கபாடி போட்டியை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், நகர கழக செயலாளர் சபரி எஸ்.முருகானந்தன் உள்பட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு தொகுதி தென்னங்குடி ஊராட்சியில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் , முனைவர் கோவி.செழியன் ஆகியோர் ரூபாய் 1.40 கோடி மதிப்பில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டிடத்தினை திறந்து வைத்தார்கள். தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி , சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்), மாநகராட்சி மேயர்சண்.இராமநாதன் , துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி , தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழக முதுநிலை மண்டல மேலாளர்செல்வம் , சதய விழாக்குழுத்தலைவர்செல்வம் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### சனாதன சக்திகளின் பிரித்தாளும் சூழ்ச்சி குறித்து விழிப்புணர்வு

# ஜன.2 முதல் வைகோ சமத்துவ நடைபயணம்!


## முதல்வர் மு.க.ஸ்டாலின் திருச்சியில் துவக்கி வைக்கிறார்!

சங்கரன்கோவில், நவ. 19 -

சனாதன சக்திகளின் பிரித்தாளும் சூழ்ச்சி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ம.தி.மு.க. மேற்கொள்ளும் சமத்துவ நடைபயணத்தை வரும் ஜன. 2ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சியில் துவக்கி வைக்க உள்ளதாக வைகோ தெரிவித்தார்.

ம.தி.மு.க. சமத்துவ நடை பயணத்திற்கு வீரர்கள் தேர்வு, அக்கட்சியின் பொதுச்செயலாளரான வைகோவின் சொந்த கிராமமான தென்காசி மாவட்டம், திருவேங்கடம் தாலுகா, கலிங்கப்பட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடந்தது.

இதற்காக நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் இருந்து திரளாகப் பங்கேற்ற தொண்டர்கள், தங்களுக்கு வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை நிரப்பிக் கொடுத்தனர்.



இதையடுத்து அவர்களை தொண்டரணி, இளைஞரணி, மாணவரணி என 3 வகையாகப் பிரித்து நேர்காணல் நடத்தி தேர்வு செய்த வைகோ, நடைபயணத்தில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து விளக்கிக் கூறினார்.

இதைத்தொடர்ந்து வைகோ செய்தியாளர்களிடம் கூறுகையில், 'வைதீக, சனாதன சக்தி களின் பிரித்தாளும் சூழ்ச்சி குறித்தும், போதைப் பொருட்கள் தடுப்பு குறித்தும் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் சமத்துவ நடைபயணத்தை தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின், வரும் ஜன. 2ம் தேதி திருச்சி உழவர் சந்தையில் இருந்து துவங்கிவைக்க உள்ளார்.

துவக்க விழாவில் கூட்டணி கட்சித் தலைவர்களான இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காதர் மொய்தீன், தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

இதையடுத்து மணப்பாறையில் கம்யூனிஸ்ட் கட்சியினரும், கொங்குநாடு மக்கள் கட்சி தலைவர் ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் உள்ளிட்டோரும் கலந்து கொள்கின்றனர்.

மதுரையில் ஜன. 12ம் தேதி நடைபெறும் நிறைவு விழா பொதுக்கூட்டத்தில் வைரமுத்து, நடிகர் சத்யராஜ், மே 17 இயக்கத் தலைவர் திருமுருகன் காந்தி, பட்டிமன்றப் பேச்சாளர் ஞானசம்பந்தன் உள்ளிட்டோரும் கலந்து கொள்கின்றனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி டி.பழனிவேல் தலைமையில் – சொ.விஜயகுமார் ஏற்பாட்டில்

# தஞ்சையில் மாநில அளவில் பெண்கள் கபடிப் போட்டி!

## அமைச்சர்கள் கோவி.செழியன், மா.சுப்பிரமணியன் – தயாநிதிமாறன் எம்.பி. தொடங்கி வைத்தனர்!



*தஞ்சை, நவ. 19-*

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தஞ்சை தெற்கு மாவட்ட கழக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் பட்டுக்கோட்டை, சூரப்பள்ளத்தில், கழக இளைஞரணிச் செயலாளரும் தமிழ்நாடு துணைமுதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தஞ்சை தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டி.பழனிவேல் தலைமையில், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சொ.விஜயகுமார் ஏற்பாட்டில் நடைபெறும், மாநில அளவிலான மாபெரும் பெண்கள் கபடிப் போட்டியை அமைச்சர்கள் முனைவர். கோவி.செழியன், மா.சுப்பிரமணியன், கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன், எம்.பி., ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை சந்திரசேகரன், எம்.எல்.ஏ, தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் கா.அண்ணாதுரை, பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் என். அசோக்குமார், பட்டுக்கோட்டை வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் என். பி.பார்த்திபன், மாநில தணிக்கைக் குழு உறுப்பினர் ஏனாதி பாலு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநில துணை செயலாளர்கள் செல்வி.நிவேதா ஜெசிக்கா, சுரேஷ் ஜெ. மனோகரன், வே.கௌதமன், திருவரங்கம் என். ஆனந்த், வழக்கறிஞர் பி. கே.பாபு, முகமது இஷ்ரத், தஞ்சை மத்திய மாவட்டக் கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் அமைப்பாளர் ஆர்.ராணிகண்ணன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் அமைப்பாளர் VGR. மணிவண்ணன், தஞ்சை தெற்கு மாவட்டக் கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் துணை அமைப்பாளர்கள் எம்.கோவிந்தராஜ், ச.சண்முகசுந்தரம், பி. ராமதாஸ், ஆ.பால முருகன், டி.சீனிவாசன், ந. லெட்சுமணகார்த்திக், ஆ.ராஜசேகர் மற்றும் கழக முன்னணி யினர் கலந்து கொண்டனர்.




## தி.மு.க. இளைஞர் அணி

### புதிய நிர்வாகிகளுக்கான 2026 தேர்தல் பணி பயிற்சி பாசறைக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து, புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள், பகுதி வாரியாக நடைபெற உள்ளன. மண்டலம்–1, சென்னை வடக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட இராயபுரம் கிழக்குப் பகுதி, மேற்குப் பகுதி, பெரம்பூர் வடக்குப் பகுதி, தெற்குப் பகுதி, ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதி மற்றும் மேற்குப் பகுதி ஆகிய பகுதிகளில் பயிற்சிப் பாசறைக் கூட்டம் கீழ்க்காணும் தேதிகளில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | பகுதி | இடம் |
|---|---|---|---|
| 22.11.2025 சனிக்கிழமை | மாலை 5.00 மணி | பெரம்பூர் தெற்குப் பகுதி | சீலம் மஹால், எத்திராஜ் சாமி சாலை, கொடுங்கையூர். |
| 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | ஆர்.கே.நகர் மேற்குப் பகுதி | மரியம் மாளிகை, எண்ணூர் நெடுஞ்சாலை, கொருக்குப்பேட்டை |
| | மாலை 5.00 மணி | இராயபுரம் மேற்குப் பகுதி | ஸ்ரீபேலஸ் திருமண மண்டபம், சூரிய நாராயண தெரு, இராயபுரம் |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 12.11.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


### திருவாரூர் மாவட்ட முன்னாள் செயலாளர் பூண்டி கே.கலைச்செல்வம் நினைவு தினம்!

## பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் அமைதி ஊர்வலம்!

*திருவாரூர், நவ19-*

திருவாரூர் மாவட்டத்தின் மாவட்டச் செயலாளரும், மனித நேய பண்பாளருமான மறைந்த பூண்டி. கே. கலைசெல்வம் அவர்களின் 18வது நினைவு தினத்தை முன்னிட்டு, அவரது சொந்த ஊரான கொரடாச்சேரியில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற அமைதி ஊர்வலம் நடைபெற்றது. இந்த அமைதி ஊர்வலத்தை மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் எஸ். கல்யாணசுந்தரம் மற்றும் தஞ்சை மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகர் எம்.எல்.ஏ. ஆகியோர் தொடங்கிவைத்தனர்.

பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற ஊர்வலத்தின் முடிவில் பூண்டி.கே.கலைசெல்வம் அவர்களது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் மறைந்த பூண்டி. கலைசெல்வம் அவர்களின் நினைவாக நடைபெற்ற ரத்ததான முகாமை சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. தொடங்கிவைத்தார். கொரடச்சேரி அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் பொதுத்தேர்வில் வெற்றி பெற்ற 3 மாணவர்களுக்கும் 2 மாணவிகளுக்கும் மறைந்த பூண்டி. கலைசெல்வம் அவர்களின் நினைவாக தலா அரைப் பவுன் தங்க நாணயங்களை முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன் வழங்கினார்.

பத்தூர் மேல்கரை சவேரியார் நடுநிலைப் பள்ளி விடுதி மாணவ மாணவிகளுக்கு உடை மற்றும் கல்வி உபகரணங்களை மறைந்த பூண்டி. கலைசெல்வம் அவர்களின் நினைவாக அவைத்தலைவர் க.தன்ராஜ் வழங்கினார்.

தஞ்சை-திருவாரூர் நெடுஞ்சாலையில் சென்ற போக்குவரத்து வாகனங்களுக்கு முகப்பு வில்லைகளை ஒட்டும் நிகழ்வை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பணங்குடி ஏ.எஸ்.குமார் தொடங்கி வைத்தார். திருவாரூர் அரசு மருத்துவமனை வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வை மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் மீனாட்சி சூர்யா பிரகாஷ் தொடங்கிவைத்தார்.

காட்டூர் பாரதி ஆதரவற்றோர் இல்லத்திற்கு மறைந்த பூண்டி. கலைசெல்வம் அவர்களின் நினைவாக உணவு மற்றும் உடைகள் வழங்கும் நிகழ்வை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நாகை அ. அசோகன், அம்மையப்பன் ராமகிருஷ்ணா சேவா யோகா முதியோர் இல்லத்திற்கு உணவு மற்றும் உடைகள் வழங்கும் நிகழ்வை பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

மருத்துவ கல்லூரி மருத்துவ மனை நோயாளிகளுக்கு மறைந்த பூண்டி. கலைசெல்வம் அவர்களின் நினைவாக மதிய உணவு வழங்கும் நிகழ்வினை மாவட்ட செயலாளர் நிவேதா முருகன், குத்தாலம் க.அன்பழகன் ஆகியோர் தொடங்கிவைத்தனர்.

இந்த நிகழ்வுகளில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பி. ராஜமாணிக்கம், தலையாமங்கலம் ஜி. பாலு, தாட்கோ தலைவர் நா.இளையராஜா, மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் அழகுதிருராஜா, மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் இரா. சங்கர்,மாநில இலக்கிய அணி துணை செயலாளர் ஆடுதுறை உத்திராபதி, சட்டமன்ற உறுப்பினர் கே.மாரிமுத்து, மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ். கார்த்திக், எம்.ராம கிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், மு.வெங்கடேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஞானசேகரன், ஆர்.எஸ்.பாண்டியன், டி.செல்வம், கணபதி, ஆடலரசன், நகர்மன்ற தலைவர்கள் மன்னை த. சோழராஜன், நவாஸ்கான் (மும்தாஜ்) புவனப்ரியா செந்தில், பாத்திமா பஷீரா, துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர்.

தேர்தல் பொறுப்பாளர் ஜெகவீரபாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன், கோ.தெட்சிணாமூர்த்தி, வே.மனோகரன், சித்தேரி சிவா என்கிற சிவசுப்பிரமணியம், வீ.எஸ்.ஆர். தேவதாஸ், ஆர்,பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், பா.பிரபாகரன், நா.கவியரசு, எஸ். ஜோதிராமன், புலிவலம்.ஏ.தேவா, ப.பிரகாஷ், கே.வி.கே.ஆனந்த் என்கிற அடைக்கலம், பாலு. ஞானவேல், ஐ.வி.குமரேசன், கேப்டன் செல்வராஜ், ஆர்.பாலச்சந்திரன்,இரா. மனோகரன், டி.எஸ்.டி. முத்துவேல், வே. மனோகரன், நகர செயலாளர்கள் வாரை.எஸ்.பிரகாஷ், வீரா.கணேசன், எஸ். வி.பக்கிரிசாமி, பேரூர் செயலாளர்கள் பா.சிவநேசன், பக்கிரிசாமி,பேரளம் தியாகு, ஏ.கே.டி.சேரன் , பூண்டி.கே. கலைவேந்தன்.

முன்னாள் ஒன்றியக் குழு தலைவர்கள் தாழை மு. அறிவழகன், சோம. செந்தமிழ்ச்செல்வன், பொதுக்குழு உறுப்பினர்கள் செல்வ ஜெயதேவன், கலைவாணி மோகன், ராஜ. பூபாலன், முருகேசன், கமாலுதீன் மற்றும் மரு.சரவணன், மரு. மலர், ஆய்வாளர் பாலசுந்தரம், பா.அரவிந்த், பகலவன், குன்னலூர் அன்பழகன், வீர.தேசபந்து, எம்.ஐ.ஆர்.தாஜுதீன், ஷோபா கணேசன், ராணி சேகர், விமலா பாலு, எம். என். ராஜா,ராஜ் என்கிற கருணாநிதி, புலவர் எண் கண்மணி, காட்டூர் சதீஷ் குமார், திவாகரன் , வழக்கறிஞர் . விநாயக மூர்த்தி உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.



சேலம் மாநகராட்சி அம்மாப்பேட்டை மண்டலத்தில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.89.16 இலட்சம் மதிப்பீட்டில் 8 சாலை பணிகள் 1518 மீ நீளத்திற்கு தார்ச்சாலை அமைக்கும் பணியினை பாலமுருகன் தெருவில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் பணியை தொடங்கி வைத்தார். உடன் மேயர் ஆ.இராமச்சந்திரன், ஆணையாளர் டாக்டர்.மா. இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.